நண்பர்களே வணக்கங்கள்:

நீண்ட நாட்களாக தாங்கள் எதிர்பார்த்து காத்திருந்த **TNPSC** துறைத் தேர்வுகள் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நிலையில் நமக்கு எழும் இயல்பான சந்தேகம்....

**தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற...**

எந்தெந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்?

பழைய தேர்வுகளின் தேர்ச்சியே போதுமா? அல்லது புதிதாக கூடுதல் தேர்வு எழுதவேண்டுமா?

**இதை தெளிவு படுத்த வேண்டியது பள்ளிக் கல்வி துறையே.**

இருப்பினும் இதுவரை வந்துள்ள அரசாணைகள் மற்றும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு எனக்குத் தெரிந்த தகவல்களைத் தொகுத்து வழங்குகிறேன்.

1) **தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற துறை தேர்வுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா?**

ஆம். அரசிதழ் எண் 36 நாள் 30.01.2020 , ( **பக்கம் 28** )
**அரசாணை நிலை எண் 14 பள்ளிக் கல்வித் துறை (பக2(1)) நாள்30.01.2020**
இன் படி மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற
Must have passed the following tests:-

(a) Account Test for Executive Officers or Account test for Subordinate Officer Part – I:

(b) (i) Tamil Nadu School Education Department Administrative Test – paper –I (Higher Secondary/ Secondary / Teacher Training and Special Schools;

(ii) Tamil Nadu School Education Department Administrative Test – paper –II (Elementary/Middle and Special Schools;

and

(c) Tamil Nadu Government Office Manual Test (Formerly District Office Manual Test)

TNPGTA

2) **மேற்குறிப்பிட்டத் துறைத் தேர்வுகளில் கட்டாயம் தேர்ச்சி பெற்றால் மட்டுமே மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வுப் பட்டியலில் சேர்ப்பார்களா?**

தற்போது இதை இரண்டு பிரிவினராக பிரித்து பார்க்கவேண்டிய சூழல் எழுகிறது.

அ) நடப்பாண்டில் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற உள்ள 2003-2004 TRB நியமன ஆசிரியர்கள்.
ஆ) வரும் ஆண்டுகளில் பதவி உயர்வு, பெற உள்ள மற்றவர்கள்.

**01.01.2021 பட்டியலுக்கு (2003-2004 TRB நியமன ஆசிரியர்கள்) இதை நடைமுறைபடுத்த சாத்தியமில்லை.**

ஏனெனில் கூடுதல் தகுதித் தேர்வு சார்ந்த அரசிதழ் 2020 ஜனவரியில் தான் வந்துள்ளது. அதற்குப் பிறகு துறைத் தேர்வுகள் நடத்தப்படவில்லை தற்போது தான் டிசம்பர்2020 துறைத் தேர்வு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**எனவே 01.01.2021 பதவி உயர்வு பட்டியல் கேட்கப்படும் பொது, பதவி உயர்வு பெற்ற பின் (குறிப்பிட்ட கால இடைவெளியில்) துறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படலாம்.**

TNPGTA

வரும் ஆண்டுகளில் பட்டியல் கேட்கப்படும் போதே கூடுதல் துறைத் தேர்வுகள் தேர்ச்சி கட்டாயமாக்கப்படலாம்.

3) **01.01.2021 பட்டியலில் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி இல்லை என்ற காரணத்தால் நிராகரிக்க வாய்ப்புள்ளதா?**

நிச்சயமாக இல்லை. COVID-19 காரணமாக துறைத் தேர்வுகள் நடத்தப்படாத காரணத்தால் 2021 பட்டியல் தயாரிப்பின் போது துறைத் தேர்வு தேர்ச்சியில் இருந்து விலக்களிக்க வேண்டும் என TNPSC செயலாளர் அனைத்து துறை செயலாளர்களுக்கும் ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளார்.

4) **சிலர் Tamil Nadu School Education Administrative Test Paper – I இல் தான் மேல்நிலைப் பள்ளி வருகிறது எனவே மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு தாள் -1 மட்டும் கூடுதலாக போதும் என்கிறார்கள் இது உண்மையா?**

இல்லை இது தவறு.

Tamil Nadu School Education Administrative Test Paper – I syllabus இல் மேல்நிலைப் பள்ளி, இடைநிலை மற்றும் ஆசிரியர் பயிற்சி சிறப்பு பள்ளிகள் பற்றிய வினாக்கள் கேட்கப்படும் அவ்வளவே.

மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு இரண்டு தேர்வுகளும் தேவை என்று தான் அரசாணையில் உள்ளது.

**5) 01.01.2021 இன் படி உயர்நிலை பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு பட்டியல் தயாரிப்பிற்கு கூடுதல் தேர்வுகள் எதுவும் குறிப்பிடவில்லையே?**

ஆம். அரசிதழ் எண் 36 நாள் 30.01.2020 இல் இடைநிலை ஆசிரியர் முதல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் வரை அனைத்து பணிநிலை பற்றியும் கூறியுள்ளது. **உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு பற்றி எதுவும் கூறவில்லை.**

எனவே உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு எந்த மாற்றமும் இல்லை, எனவே பழைய நடைமுறைகளே தொடர்கிறது.

**6) இதற்கு முன் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு எந்த அரசாணை அடிப்படையில் தகுதி நிர்ணயம் செய்யப்பட்டது?**

அரசாணை நிலை எண்: 136 பள்ளிக் கல்வி (ஏ1) துறை நாள் 14.08.2006

TNPGTA

வ.எண் 1) இன் படி உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியருக்கு இந்த நடைமுறையின் அடிப்படையில் தான் தேர்வு நிர்ணயிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு மட்டுமே கூடுதல் தேர்வு தேர்ச்சி பெற வேண்டிய சூழல்.

**7) தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை நிர்வாகத்தேர்வு தாள்-1 மற்றும் தாள்-2 தற்போது தான் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா?**

இல்லை- **TNPSC** துறை தேர்வுகள் **2017** இல் மறு சீரமைக்கப்பட்டது. அப்போது இருந்தே இந்த இரு தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகிறது. தேர்வு முறையில் 2018 இல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**8) பள்ளித் துணை ஆய்வாளர் தேர்வும் (D.I – TEST) இந்த இரு தேர்வுகளும் ஒன்றா?**

**TNPSC** துறை தேர்வுகள் மறுசீரமைப்பிற்கு முன்னர் பள்ளித் துணை ஆய்வாளர் தேர்வு தாள் -1 , தாள் -2 மற்றும் Education Statistics என மூன்று தாள்களை கொண்டிருந்தது.
மறு சீரமைப்பின் போது அந்த தேர்வுகள் நீக்கப்பட்டு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை நிர்வாகத்தேர்வு தாள்-1 மற்றும் தாள்-2 என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**9) அப்படி எனில் ஏற்கனவே பள்ளித் துணை ஆய்வாளர் தேர்வு (D.I – TEST) எழுதித் தேர்ச்சி பெற்றவர்கள் புதிதாகத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை நிர்வாகத்தேர்வு தாள்-1 மற்றும் தாள்-2 எழுத தேவையில்லையா?**

இதைத் தெளிவு படுத்த வேண்டியது பள்ளிக் கல்வித்துறையே.

**TNPSC** துறைத் தேர்வுகள் மறுசீரமைப்பில் D.I TEST PAPER I , II Tamil Nadu Education Department Administrative Test Paper I , II என மாற்றம் செய்யப்பட்டுள்ளதை same syllabus மூலம் அறிய முடிகிறது.

TNPGTA

**10) TNPSC இதற்கு விளக்கம் அளித்துள்ளதா?**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் (2005) படி (R.T.I) – TNPSC இடம் கேட்கப்பட்ட வினாவிற்கு.

**துறை தேர்வுகளை நடத்துவது மட்டுமே எங்கள் பணி,**

எந்தெந்தத் தேர்வுகள் **இணையானது** தற்போது **எந்த தேர்வில் தேர்ச்சி** பெற வேண்டும் போன்ற விவரங்களை **அந்தந்த துறைகளிடம்** கேட்டு பெறலாம் என பதில் வந்துள்ளது.

**11) பள்ளிக்கல்வித்துறை விளக்கம் அளித்துள்ளதா?**

இதுவரை இல்லை. (R.T.I ) வினாவிற்கு மழுப்பலான பதிலையே தந்துள்ளது

பழைய D.I TEST PAPER I , II ஆனது புதிய Tamil Nadu Education Department Administrative Test Paper I , II க்கு இணையானது என பள்ளிக் கல்வித்துறை அறிவித்தால் ஏற்கனவே D.I TEST PAPER I , II தேர்ச்சி பெற்றவர்கள் புதியத் தேர்வினை எழுத வேண்டிய கட்டாயம் இல்லை.

12) **ஏற்கனவே பதவி உயர்வுப் பட்டியலில் இடம் பெற்று தற்காலிகத் துறப்பு செய்தவர்கள் இந்த கூடுதல் தேர்வுகளை எழுத தேவையில்லை என்கிறார்களே?**

இல்லை – அப்படி இருக்க வாய்ப்பில்லை அனைவருக்கும் ஒரே விதமான தகுதியினை தான் நிர்ணயம் செய்வார்கள்.

13) **எல்லாம் இருக்கட்டும் : நாங்கள் கூடுதல் தேர்வுகளை எழுதவா? வேண்டாமா?**

சற்று சவாலான கேள்வி.

எனது தனிப்பட்ட விளக்கம்: தங்களின் நடப்பு பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அறிவினை பெருக்கிக்கொள்ள இந்த கூடுதல் நிர்வாகத் தேர்வுகளை எழதலாம்.

பதவி உயர்விற்கு தேவையோ? இல்லையோ? புதிய தேர்வுகள் நடைமுறையில் இது புதிய அனுபவத்தினை தங்களுக்கு ஏற்படுத்தித்தரும்.

**தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகள்.**

TNPGTA

TNPSC – Notification No. 01/2021
Advertisement No. 574

Last Date : 29.01.2021

Apply Online only
Fee payment online only (per paper 200 + Registration fee 30)
www.tnpsc.gov.in
www.tnpscexams.net

TNPGTA – மாநிலச் சட்டச் செயலாளர் – க.செல்வக்குமார் – selva7pc@gmail.com

| S.No | TEST CODE | NAME OF THE EXAMINATION | TYPE | DATE & TIME | Max MARKS (100) | Minimum Pass Marks (45) |
|---|---|---|---|---|---|---|
| 1 | **065** | Tamil Nadu School Education Department Administrative Test – Paper-I | Objective (without Books) | **17.02.21** 9.30am-11.30am | 80 | 36 |
| | | | Descriptive (without Books) | 11.30am-12noon | 20 | 9 |
| 2 | **072** | Tamil Nadu School Education Department Administrative Test – Paper-II | Objective (without Books) | **17.02.21** 2.30pm-4.30pm | 80 | 36 |
| | | | Descriptive (without Books) | 4.30pm-5 pm | 20 | 9 |
| 3 | **124** | The Account Test for Subordinate Officers – Part I | Objective (without Books) | **19.02.21** 9.30am-10.30am | 40 | 18 |
| | | | Descriptive (with Books) | 10.40am-12.10pm | 60 | 27 |
| 4 | **152** | The Account Test for Executive Officers | Objective (without Books) | **20.02.21** 9.30am-10.30am | 40 | 18 |
| | | | Descriptive (with Books) | 10.40am-12.10pm | 60 | 27 |
| 5 | **172** | The Tamil Nadu Government Office Manual Test | Objective (without Books) | **21.02.21** 2.30pm-3.30pm | 40 | 18 |
| | | | Descriptive (with Books) | 3.40pm-5.10pm | 60 | 27 |

TNPGTA